குறைந்தபட்ச ஊதிய வீதங்களை அமுல் நடத்தும் திட்டம்.

*வினா எண் 560—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்த பட்ச ஊதிய அமுலுக்கு தனிப்பிரிவை நியமிக்க தமிழக அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) குறைந்த அளவு ஊதிய வீதங்களை தீவிரமாக அமுல் நடத்தும் பொருட்டு தனிப் பிரிவை நியமிக்கும் செயற் குறிப்பை அரசு பரிசீலித்து முதற் கட்டமாக குறைந்த அளவு ஊதியச் சட்டம், சம ஊதியச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களுடன் ஏனைய தொழிற் சட்டங்களையும் அமுல் படுத்த மூன்று தொழிலாளர் துறை ஆய்வாளர்களை 1—8—1981 முதல் நியமித்துள்ளது.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறைந்த பட்ச கூலிச் சட்டத்தை அமுலாக்கு வதற்கு ஒரு சிறிய குழு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம், இன்றைக்கு தமிழ் நாட்டிலே ஒரு கோடி பேரை எட்டக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுடைய குறைந்த பட்ச கூலிச் சட்டத்தை அமுல் நடத்துவதில் நிர்வாக ரீதியாக ஒரு அமைப்பு இல்லை. ஆகவே, அந்தச் சட்டத்தை அமுல் நடத்தக் கூடிய முறையிலே கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு நிர்வாக அமைப்பை உரு வாக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்தலை வர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுடைய குறைந்த பட்ச ஊதியம் அமுல் செய்வதை ரெவின்யூ டிபார்ட்மென்ட் பார்த்துக் கொண்டு இருக்கிறது. அது மேலும் சிறப்பாக செயல் படுவதற்கு அரசு என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டு, இங்கே மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு கருப்பையா அவர்களால் லேபர் டிபார்ட்மென்டே எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. இதைப் பற்றியெல்லாம் பரிசீலனை

செய்து தொழிலாளர்களுக்கு கொடுக்கக் கூடிய கூலிகள் ஒழுங்காக சேர்க்கப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். அதில் மிக அக்கறை செலுத்துகிறது இந்த அரசு என்று சொல்லிக் கொள்கிறேன்.

அம்பத்தூர் நகரியத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 561—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி அம்பத்தூர் நகரியத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) திட்டம் உடனடியாக செயலுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு விரைவில் முடிக்கப்பட உள்ளது.

(முற்பகல் 9–50)

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, நிரந்தரமான தண்ணீர் திட்டத்திற்காக இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 10 நாட்களுக்கு முன்பு அம்பத்தூர் நகரியத்தில் கால்கோள்விழா நடத்தியிருக்கிறார்கள். இந்த நிரந்தரத் திட்டத்தோடு தற்காலிகமாக குடிநீர் தருவதற்கு ஏதேனும் துணைத் திட்டம் இருக்கிறதா ? தற்போது 5 இலட்சம் காலன் தண்ணீர் மட்டுமே நிரந்தரத் திட்டத்தின் மூலம் பெற வாய்ப்பு இருக்கிறது. அதுவும் பப்ளிக் ஃபவுண்டன்ஸ் மூலம் தான் தரப்படுகிறது என்று அறிகிறேன். வீட்டுக்கு வீடு குழாய் அமைத்து, தேவைக்கு ஏற்ப தண்ணீர் வழங்க இந்த 5 இலட்சம் காலன் என்ற அளவை அதிகப்படுத்தும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா ? அல்லது வேறு ஏதேனும் திட்டம் அம்பத்தூர் நகரிய மக்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.